# மேட்டுப்பாளையம் நகராட்சி

29 .10.2019ம் தேதி செவ்வாய்கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1.. | இந்நகராட்சியில் 2017-18 ஆம் ஆண்டில் செய்த வளர்ச்சி பணிகளை சுதந்திரதின விழா சிறப்பு மலர் 2019 மற்றும் தொழில் மலர் 2019லும் Express Publication (Madurai) Private Limited என்கிற நிறுவனத்தின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.<br><br>1. சுதந்திர தின விழா மலர் – 2019 = ரூ.23100.00<br>2. தொழில் மலர் 2019 = ரூ.31500.00<br><br>மேற்கண்ட வரப்பெற்ற தொகையினை Express Publication (Madurai) Private Limited நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3388/2019/இ1 |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகளின் விவரத்தினை மக்கள் குரல் நாளிதழிலில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்காண் நாளிதழிலில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.9,996/-ஐ வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை Makkal Kural நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3388/2019/இ1 |
| 3.. | தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தால் Ambient Air quality Noisesurvey நடத்தப்பட உள்ளது. மேற்படி நடத்தப்பட உள்ள Noisesurvey **ற்கு தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு “The District Environmental Engineer**”என்ற பெயரில் தொகை ரூ.19200/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3441/2019/இ1 |

4

**இந்நகராட்சியில் இயங்கி வரும் HP** லேசர் பிரிண்டர்களுக்கு பயன்படுத்தப்படும் டோனர்கள் ரீபில் மற்றும் ரீகண்ட்டிசன் செய்து கொள்ள கீழ்க்கண்ட நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

ரீபில் ரீகண்டிசன் செய்ய
அனைத்து டோனர்களுக்கும் ,
டோனர் ஒன்றுக்கு தொகை

1. **Syscon Systems, K.K.pudur, Coimbatore 950.00**
2. **The professional Technologys, P.N.Palayam, Coimbatore 1121.00**
3. **Sri Hyagriva Computers, Ondipudur, Coimbatore 1163.48**

**மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் டோனர்கள் ரீபில் மற்றும் ரீகண்டிசன் செய்ய விலை குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திடமிருந்து டோனர்கள் ரீபில் மற்றும் ரீகண்டிசன் செய்து கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3259/2019/டி1

5

**இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் விவரம் மற்றும் தினகரன் நாளிதழில் தொழில் மலர் 2019லும், தீக்கதிர் நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணமாக கீழ்க்கண்டவாறு தொகை வரப்பெற்றுள்ளது.**

1. **தீக்கதிர், 4/1, சுப்பையன் வீதி, கோயமுத்தூர் 4 X25 = ரூ.15000.00/-**
2. **KALpublication (P) LTD, கோயமுத்தூர் = ரூ.28000.00/-**

**மேற்காண் வரப்பெற்ற விளம்பர கட்டணங்களை தினகரன் மற்றும் தீக்கதிர் நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்

**3388/2019/இ1**

6.

மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான படிகாரம் (sulphate of alumina ferric) விநியோகம் செய்ய 04.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 22.10.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s அல்கெம் இண்டஸ்ட்ரீஸ் 32A, ஊட்டி ரோடு, மேட்டுப்பாளையம் | 2,30,000/- | 2.30,000- |
| 2 | M/s. அம்மன் டிரேடர்ஸ், ஏ, பிளாட் எண். L42, ஹவுசிங்யூனிட், சேலம். | 2,30,000/- | 2,22,600/- |

**அலுவலகக் குறிப்பு** :

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் வரிசை எண்.2ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ் சேலம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க, குடிநீர் அவசர அவசியம் கருதி , மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2968/2019/அ5

| | |
|---|---|
| 7 | இந்நகராட்சிக்கு சொந்தமான வெள்ளிப்பாளையம் ரோட்டில் அமைந்துள்ள மாட்டிறைச்சி கடை எண்.1 மற்றும் 4 பழுதடைந்த நிலையில் இருந்தது. தற்பொழுது பழுதுகள் சரி செய்யப்பட்டு உபயோகிக்கும் நிலையில் கடைகள் உள்ளதாக சிறப்பு வருவாய் ஆய்வாளர் குறிப்பு வழங்கியுள்ளார் அதன்பேரில் மேற்படி கடைகளை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்**<br>**ந.க.எண்.2442/2019/அ1** |
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் G.O.(D) No .398 Municipal Administration and Water Supply (MA3) Department ல் நாள்.09.09.2016 ன்படி KfW assisted (SMIF – TN- II -2) திட்டத்தின் கீழ் ரூ.91.70கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம் (UGSS) செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.<br><br>பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குடியிருப்பு வணிக வளாகங்களுக்கு வழங்கப்படும் இணைப்புகளுக்கு நகராட்சியில் வசூல்செய்ய வேண்டிய மாதாந்திரக் கட்டணம் வைப்புத் தொகையின் விவரத்தினை Tamilnadu Urban Development Fund, சென்னை நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற கடித்த்தில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதன் விவரம்<br><br>Deposit and Tariff |

| கட்டிட அளவு | வைப்புத் தொகை | | மாதாந்திர சேவை கட்டணம் | |
|---|---|---|---|---|
| | வீட்டு உபயோகம் | பிற உபயோகம் | வீட்டு உபயோகம் | பிற உபயோகம் |
| 500 சதுர அடிக்கும் குறைவானவை | 5000 | 10000 | 100 | 300 |
| 501 முதல் 1200 சதுரடிக்கு உட்பட்டவை | 7500 | 15000 | 120 | 360 |
| 1201 முதல் 2400 சதுரடிக்கு உட்பட்டவை | 10000 | 20000 | 140 | 420 |
| 2401 சதுரடிக்கு மேற்பட்டவை | 12500* | 25000* | 160* | 480* |
| சராசரி | 7000 | 11431 | 116 | 317 |

• This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. have to be increased in proportion to the increase in plinth area .

மேற்காண் வரப்பெற்ற கட்டணத்தினை வசூல் செய்வதற்கு இந்நகர்மன்றம் ஏற்கனவே அனுமதி வழங்கி உள்ளது.

தற்போது பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் வைப்பு மற்றும் மாதாந்திர கட்டணம் ஆகியவைகள் மறுநிர்ணயம் செய்யும் பொருட்டு செயற்பொறியாளர் ( பாதாள சாக்கடை திட்ட கோட்டம்) தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.1819/ F Mtp UGSS / JDO / 2019// dated : 29.10.2019 ன்படி Financial viability கிடைக்கபெற்று கீழ்க்கண்ட கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகை நிர்ணயிக்கவும் உபவிதிகளையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| UGSS TO METTUPALAYAM MUNICIPALITY | | | | |
|---|---|---|---|---|
| EXPECTED NO OF CONNECTION | | | | |
| S. No | Area in Sqft | Domestic | Non Domestic | Total |
| 1 | <500 | 10358 | 2810 | 13168 |
| 2 | 501 – 1200 | 6176 | 614 | 6790 |
| 3 | 1201 – 2400 | 1081 | 311 | 1392 |
| 4 | 2401 –and above | 292 | 240 | 532 |
| | | 17907 | 3975 | 21882 |

| UGSS TO METTUPALAYAM MUNICIPALITY | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| DEPOSIT AMOUNT WORKED OUT | | | | | | | |
| S.No | Area in Sqft | Domestic | | | Non Domestic | | |
| | | Connection Expected | Deposit Rate | Total | Connection Expected | Deposit Rate | Total |
| 1 | <500 | 10358 | 5000 | 51790000 | 2810 | 10000 | 28100000 |
| 2 | 501 – 1200 | 6176 | 7500 | 46320000 | 614 | 15000 | 9210000 |
| 3 | 1201 – 2400 | 1081 | 10000 | 10810000 | 311 | 20000 | 6220000 |
| 4 | 2401 –and above | 292 | 12500 | 3650000 | 240 | 25000 | 6000000 |
| | total | 17907 | | 112570000 | 3975 | | 49530000 |

| UGSS TO METTUPALAYAM MUNICIPALITY | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| TARIFF AMOUNT WORKED OUT | | | | | | | |
| S.No | Area in Sqft | Domestic | | | Non Domestic | | |
| | | Connection Expected | Tariff Rate | Total | Connection Expected | Tariff Rate | Total |
| 1 | <500 | 10358 | 100 | 1035800 | 2810 | 300 | 843000 |
| 2 | 501 – 1200 | 6176 | 120 | 741120 | 614 | 360 | 221040 |
| 3 | 1201 – 2400 | 1081 | 140 | 151340 | 311 | 420 | 130620 |
| 4 | 2401 –and above | 292 | 160 | 46720 | 240 | 480 | 115200 |
| | Total | 17907 | | 1974980 | 3975 | | 1309860 |

| UGSS TO METTUPALAYAM MUNICIPALITY | | | | | |
|---|---|---|---|---|---|
| **DEPOSIT AND TARIFF AMOUNT** | | | | | |
| **S.No** | **Area in Sqft** | **Domestic** | | **Tariff** | |
| | | **Domestic** | **Non Domestic** | **Domestic** | **Non Domestic** |
| **1** | **<500** | **5000** | **10000** | **100** | **300** |
| **2** | **501 – 1200** | **7500** | **15000** | **120** | **360** |
| **3** | **1201 – 2400** | **10000** | **20000** | **140** | **420** |
| **4** | **2401 –and above** | **12500** | **25000** | **160** | **480** |

| UGSS TO METTUPALAYAM MUNICIPALITY | | | | | |
|---|---|---|---|---|---|
| **DEPOSIT AND TARIFF AMOUNT** | | | | | |
| **S.No** | **Area in Sqft** | **Domestic** | | **Tariff** | |
| | | **Domestic** | **Non Domestic** | **Domestic** | **Non Domestic** |
| **1** | **<500** | **51790000** | **28100000** | **1035800** | **843000** |
| **2** | **501 – 1200** | **46320000** | **9210000** | **741120** | **221040** |
| **3** | **1201 – 2400** | **10810000** | **6220000** | **151340** | **130620** |
| **4** | **2401 –and above** | **3650000** | **6000000** | **46720** | **115200** |
| | **Weight average** | **6286.37** | **12460.38** | **110.29** | **329.52** |

மேற்கண்ட ஒருமுறை செலுத்தும் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர சேவை கட்டணங்கள் நடப்பு திட்ட மதிப்பீட்டிற்கான ரூ.91.70 கோடிக்கு ஏற்ப நிர்ணயம் செய்யப்பட்டவை ஆகும். ஆகையால் திருத்தியமைக்கப்பட்ட ஒரு முறை செலுத்தும் வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர சேவை கட்டணங்கள் கோவை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் பொது மக்களிடம் கட்டணங்கள் மற்றும் வைப்புத் தொகை வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : 1. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் பொது அங்கீகாரம் பெற நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

2. உபவிதிகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் ஆகும் செலவினத்தை 2019 –2020 ஆம் பொது நிதி திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 9. | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 33 வார்டுகளில் தற்போது 12431 குடிநீர் இணைப்புகள் உள்ளன. இவற்றில் இருமுறை பதியப்பட்ட இணைப்புகள், துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகள், தவறுதலாகப் பதியப்பட்ட கேட்புகள், இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் இணைப்புகள், வழியோர கிராமங்களுக்கான கேட்புகள் (நிலுவை) ஆகிய இனங்களின் கேட்புகள் கீழ்க்கண்டவாறு உள்ளன. இக்கேட்புகளை நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | இருமுறை பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு | 2,62,125/- |
| 2 | துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகளின் கேட்பு | 6,99,916/- |
| 3 | தவறுதலாகப் பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு | 17,460/- |
| 4 | இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் இணைப்புகளின் கேட்பு | 12,000/- |
| 5 | வழியோர கிராமங்களின் கேட்பு | 73,180/- |
| | மொத்தம் | 10,64,681/- |

**அலுவலகக் குறிப்பு : கடந்த காலங்களில் குடிநீர்க் கட்டணங்களின் கேட்புகளில் (நிலுவை)** 1). இருமுறை பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 2). துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 3).தவறுதலாகப் பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 4). இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் கேட்பு, 5). வழியோர கிராமங்களின் கேட்பு ஆகிய கேட்புகளை நீக்கம் செய்ய அனுமதிக்கலாம்.
ந.க.எண்.4140/2015/அ5

| | |
|---|---|
| 10. | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 33 வார்டுகளில் தற்போது 12431 குடிநீர் இணைப்புகள் உள்ளன. இவற்றில் இருமுறை பதியப்பட்ட இணைப்புகள், துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகள், தவறுதலாகப் பதியப்பட்ட கேட்புகள், இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் இணைப்புகள், வழியோர கிராமங்களுக்கான கேட்புகள் (நடப்பு) ஆகிய இனங்களின் கேட்புகள் கீழ்க்கண்டவாறு உள்ளன. இக்கேட்புகளை நீக்கம் செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | இருமுறை பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு | 2,57,400 |
| 2 | துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகளின் கேட்பு | 4,29,600 |
| 3 | தவறுதலாகப் பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு | - |
| 4 | இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் இணைப்புகளின் கேட்பு | 14,400 |
| 5 | வழியோர கிராமங்களின் கேட்பு | 8,80,743 |
| | மொத்தம் | 15,82,143 |

**அலுவலகக் குறிப்பு : கடந்த காலங்களில் குடிநீர்க் கட்டணங்களின் கேட்புகளில் (நடப்பு)** 1). இருமுறை பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 2).துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 3).தவறுதலாகப் பதியப்பட்ட இணைப்புகளின் கேட்பு, 4). இரயில்வே துறையால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களின் கேட்பு, 5). வழியோர கிராமங்களின் கேட்பு ஆகிய கேட்புகளை நீக்கம் செய்ய அனுமதிக்கலாம்.
ந.க.எண்.4140/2015/அ5

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்களுக்கு மாவட்ட ஆட்சியர், கோவை அவர்களின் 2019-2020ஆம் ஆண்டு ஊதிய நிர்ணயப்பட்டியலில் மஸ்தூர்-2 ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ.350/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2011 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியில் 18423 குடியிருப்புகள் உள்ளன. எனவே, 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 61 பணியாளர்களை பணியமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவர்கள் இப்பணியினை 01.11.2019 முதல் 89 நாட்கள் மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.19,00,150/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்** |
| 12 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு உதவி பொறியாளர் கிழக்கு மற்றும் மேற்கு இருவருக்கும் மற்றும் E1 எழுத்தர்க்கும் கணினிமூலம் பணிகளை மேற்கொள்ள கணினி தேவைப்படுவதால் புதிதாக 3 எண்ணிக்கை கணினிகளை தரமணி பெண்கள் எழுது பொருள் மற்றும் அச்சக கூட்டுறவு சங்கத்திடமிருந்து வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்**<br>**ந.க.எண்.003865/டி1/19** |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2018 – 2019ம் ஆண்டிற்கு வருவாய் மூலதன நிதி மற்றும் குடிநீர்நிதி, ஆரம்பக் கல்விநிதி, தணிக்கைஅறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள் தயாரித்து தட்டச்சு செய்து வழங்கியதற்கு ரூ.9,500/- ஆர்.சேஷம்மாள், சிங்காநல்லூர் மற்றும் ரூ.6000/- ஆர்.கவிதா, கோவை நிறுவனத்திற்கும் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்**<br>**ந.க.எண்.115/2019/அ3** |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெறும் மற்றும் இறந்த பணியாளர்களுக்காக நகராட்சி பங்கு தொகையாக நபர் ஒருவருக்கு ரூ.10,000/- வீதம் வழங்க ஆணையருக்கு பொது அதிகார வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்**<br>**ந.க.எண்.3505/2019/அ3** |
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.17ல் ராஜபுரம் பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கழிப்பிடத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள ரூ. 2.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்** |
| 16 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.1ல் ஏசுதுரை சந்து பகுதியில் உள்ள சிறுபாலம் அமைக்கவும் மேலும் பாலத்திற்கு அருகில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடத்தில் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ. 3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணிகளை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்** |
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 1 to 33 வார்டுகளில் உள்ள பிரதான குடிநீர் குழாய்கள் பம்பிங்குழாய்கள் பகிர்மான குழாய்கள் மற்றும் இதர இணைப்புகளில் வரும் குடிநீர் கசிவுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு ஆட்கள் JCB வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள் கொண்டு பழுதுகளை நீக்கி பொது மக்களுக்கு உடனுக்குடன் குடிநீர் வழங்கும் பொருட்டு அனைத்து பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்க மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கி பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்க ஒப்புதலுக்கு<br>**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்** |

18 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 to 33 வார்டுகளில் உள்ள அனைத்து மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து செல்லும் குடிநீர் குழாய்களில் வால்வுபிட் தொட்டிகளில் உள்ள Cover slap அனைத்தும் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்துக்குள்ளாகிறார்கள் மேற்கண்ட பணியை மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வழங்க ஒப்புதலுக்கு

**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்**

19 மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் பொது கழிப்பிடங்களுக்கு தேவையான தண்ணீர் வழங்க மோட்டார்கள், நீர்முழ்கி மோட்டார்கள் ஆகியவை பழுதடைந்துள்ளதால் தண்ணீர் வழங்க இயலவில்லை. ஆதலால், அவ்விடங்களில் உள்ள நீர்முழ்கி மோட்டார்கள் சரி செய்ய வேண்டியது அவசியமானது. மேலும், இம் மோட்டார்கள் அதிக மின்னோட்டம் காரணமாகவும் ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் குறைவாக உள்ளதாலும் காயில் பழுதாகியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இப்பணியினை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றபொருள் வரைவு ஒப்புதலுக்கு

**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம்**

20 இந்நகராட்சியில் 2018–19 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் (வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதி) தனியார் திரு. R.A பிரதீப்ராஜ் B.Com மூலம் பகுதி கணக்குகள் தயார் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/– நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.854/2018/பி1

21 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகளுக்கு 15.10.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16. எம்.எஸ்.ஆர் புரம் பொதுக்கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி செய்தல் | 0.90 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 2.84% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | நகராட்சி எல்லைக்குட்பபட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைத்தல் | 3.00 | ஸ்ரீ சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 2.26% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 22. | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிக்கு 10.10.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி உரக்கிடங்கில் உள்ள உலர்கழிவு சேகரிப்பு மையத்தில் மேம்பாட்டு பணிகள் செய்தல் | 3.00 | எம். வேலுசாமி | 1.44% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| | | | சி.நாகராஜ் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.நாகராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சத்தியமூர்த்தி நகரில் உள்ள நகரவை துவக்கப்பள்ளிக்கு மராமத்து பணிகள் மேற்கொள்ளுமாறு அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொண்டுள்ளார். ஆகையால் அப்பள்ளியில் உள்ள Class Room க்கு தரைதளம் Tiles அமைத்தல், கதவு ஜன்னல் மாற்றி அமைத்தல், மேற்கூரை சுருக்கி போடுதல் கழிவறைக்கு Closet அமைத்தல் ஆகிய மராமத்து பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணியினை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 24 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். K.DIS No. 28069/J3/2018, நாள்.17.06.2019ல் மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2019 –2020ன் கீழ் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணியினை மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 61 நபர்களை பணியமர்த்திக் கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ரூ.115.00 இலட்சம் மதிப்பீட்டில் 04.10.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் நேரிடையாக அலுவலகத்தில் பெறப்பட்டது. ( மின்னஞ்சல் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை).<br>1. M/s. S.S.Engineers, Coimbatore<br>2. M/s. AR ES PE Infra Private Ltd, Coimbatore.<br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் இரு உறைகளில் (Technical Bid, Price Bid) கூர்ந்தாய்வுக் குழுவினர் முன்னிலையில் 04.10.2019 அன்று 4.30 மணி அளவில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 M/s. S.S.Engineers, Coimbatore, அவர்களது உறை தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. வரிசை எண்.2 M/s. AR ES PE Infra Private Ltd, Coimbatore.என்பவரது ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்பத் தகுதி இல்லாததால் அவர்களது ஒப்பந்தப்புள்ளி தள்ளுபடி செய்யப்பட்டு வரிசை எண்.1 M/s. S.S.Engineers, Coimbatore, அவர்களது தொழில்நுட்ப புள்ளிகள் தகுதி பெற்றதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களது. விலைப்புள்ளியை (Price Bid) 10.10.2019 அன்று கூர்ந்தாய்வு குழுவினர் முன்னிலையில் திறக்கப்பட்டது. மேற்கண்ட விலைப்புள்ளி மதிப்பீட்டை விட 2.00% அதிகம் கோரியுள்ளதால், மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு விலைப்புள்ளியை குறைத்து கொடுக்க கடிதம் அனுப்பப்பட்டதில் அவர் விலைப்புள்ளியை குறைத்து மதிப்பீட்டை விட 1.00% அதிகம் கொடுத்துள்ளார். மேலும், அவ்வொப்பந்ததாரர் நிர்வாக செலவினங்கள் மற்றும் ஆட்களின் கூலி உயர்வு அதிகமாக உள்ளதால் மேலும் விலைப்புள்ளியை குறைக்க இயலாது எனவும் கோரியுள்ளார். எனவே, இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் அதிக செலவினம் மற்றும் காலதாமதம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதத்திற்கு 5%க்கு மிகாமல் உள்ளதாலும் பொது சுகாதார அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் இவ்வொப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |
| 25 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் இயங்கி வரும் புதிய நகராட்சி அலுவலகத்தில் வாகனங்கள் நிறுத்த மேற்கூரை அமைப்பதற்கு மற்றும் அலுவலகத்தில் சில அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளவும் ரூ.7.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம் |
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண். 22,23 நாடார் காலனி பகுதியில் மகாதேவபுரம் 8வது வீதியில் உள்ள தரைதளம் பழுதடைந்து பொதுமக்களுக்கு சுகாதாரகேடு ஏற்படும் வண்ணம் உள்ளது என்று அப்பகுதி மக்கள் அனைவரும் விண்ணப்பம் கொடுத்துள்ளதால் அவ்விடத்தை பார்வையிட்டு தரை பாலத்தை புதியதாக அமைக்க மதிப்பீடு தொகை ரூ.2.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் |

| | |
|---|---|
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் கீழ்க்காணும் பணிகளுக்கு 18.10.2019 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியகளில் பிரதான கால்வாய்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை இயந்திரத்தைக் கொண்டு தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | திரு.என்.ஜெகநாதன் | 3.71% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு . |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட முக்கிய சாலைகளை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் | 2.00 | திரு.என்.ஜெகநாதன் | 1.68% மதிப்பீட்டிற்கு அதிகம். |
| | | | ஸ்ரீ ஆஸ்க் சுஸ்மா இன்பராஸ்டக்சர்ஸ் | 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிகளுக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 28 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.20ல் நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியின் நுழைவு வாயிலுக்கு அருகில் மேற்கு பார்த்த அடுக்குமாடி (தரைதளம் மற்றும் முதல்தளம்) கட்டிடம் உள்ளது. இக்கட்டிடம் 1975 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு 45 ஆண்டுகள் கடந்த நிலையில் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பள்ளி குழந்தைகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. எனவே, பள்ளி மாணவிகளின் பாதுகாப்பு நலன்கருதி பழுதடைந்த கட்டிடத்தை முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்த மாவட்ட ஆட்சியர், கோவை அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுரை வழங்கியதின் அடிப்படையில் மேற்படி கட்டிடத்தை இடிக்க மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் அவர்களது உத்தரவு பெற்று பணிமேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2508/17/இ1

| | |
|---|---|
| 29 | மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண்.10 சத்தியமூர்த்தி நகர் நந்தவனம் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுரம் செயலாக்க மையத்தில் சேகரமாகும் குப்பைகளைக் கொண்டு நுண்ணுரம் தயாரிக்கவும் நுண்ணுயிர் செயலாக்க மையத்தை தூய்மையாக பராமரிக்கவும் நுண்ணுயிர் செயலாக்க மையத்தில் உருவாகும் நுண்ணுரங்களை விவசாயிகளுக்கு விற்கவும் அதன் மூலம் கிடைத்திடும் தொகையினை இங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கிடவும். மேட்டுப்பாளையம் அனைத்து ((இந்து) சமுதாய சங்கத்தின் சார்பாக கோரப்பட்டுள்ளது.<br>**<u>மேலும் நுண்ணுயிர் உரம் தயாரிக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளின் விவரம்.</u>**<br>1. நுண் உரத்திடலில் பணிபுரியும் பணியாளர்களை அவர்களது சொந்தப் பொறுப்பில் நியமித்துக் கொள்ள வேண்டும்.<br>2. பணியாளர்களுக்கு உரிய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்.<br>3. பணியாளர்களின் வருகைப் பதிவேடு உரிய முறையில் பராமரித்திடல் வேண்டும்.<br>4. நுண் உரத்தினை கிருமி நாசினி தெளித்து தூய்மையாக பராமரித்திடல் வேண்டும்<br>5. உரிய பதிவேடுகள் பராமரிக்க வேண்டும்.<br>6. அவ்வப்போது ஆணையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் அறிவுரைகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்<br>7. நுண் உரக்கூடத்தில் அமைந்துள்ள இயந்திரங்கள் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் உடனடியாக நகராட்சி அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.<br><br>நுண்ணுயிர் உரம் தயாரித்து அதனை விவசாயங்களுக்கு விற்பனை செய்யவும் அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தினை பணியாளர்களுக்கு வழங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு மேற்படி சங்கத்திற்கு உத்தரவு வழங்கலாம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2616/19/எச்1 |